24th August 1972 (Thursday) ...	1. The Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Bill, 1972. 2. The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1972. 3. The Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, 1972. 4. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1972.
25th August 1972 (Friday) ...	1. The Tamil Nadu Appropriation Bill, 1972. 2. The Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972. 3. Other Official Bills, if any.

The Council will meet on 26th, if necessary. The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

3. சட்டமன்ற விதி 82-ன் கீழ் முதலமைச்சரின் விளக்க உரைகள்

(1) கடையநல்லூர் இரயில் நிலையத்தில், திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக் கொண்டது குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 16-8-72 புதன்கிழமை, அதிகாலை 2 மணி அளவில் தென் பிராந்திய ரயில்வேயின் விருதுநகர்-தென்காசி மீட்டர்கேஜ் இருப்புப் பாதையிலுள்ள கடையநல்லூர் இரயில் நிலையத்தில் திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக் கொண்டன என்ற தகவலைக் கேட்டு வருத்தத்தில் ஆழ்ந்துள்ளோம். இந்த விபத்தின் காரணமாக 6 பேர் கடுமையான காயமடைந்தனர்; 4 பேர் சிறு காயமடைந்தனர். மேலும் 41 பயணிகளுக்கு இரயில் நிலையத்திலும், 3 பேருக்கு உள்ளூர் அரசு மருத்துவ மனையிலும் முதலுதவி அளிக்கப்பட்டது. கடுமையான

காயமடைந்தவர்கள், சிறு காயமடைந்தவர்கள் அனைவரும் கடையநல்லூரிலுள்ள அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபின்னர், மேற்கொண்டும் சிகிச்சை அளிப்பதற்காக திருநெல்வேலி அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிகிச்சைக்குப்பின் இப்போது இருவர் மருத்துவ மனையிலிருந்து திரும்பினர்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை சூப்ரண்டுடனும், மாவட்ட வருவாய் அதிகாரியுடனும் விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, தேவையான உதவியை நல்கிட அதிகாரிகளுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தார். அவருடைய உத்தரவின்பேரில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து 30 பேர்கள் கொண்ட மருத்துவக் குழு ஒன்று இடத்திற்கு விரைந்துசென்று காயமுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்த்து, அவர்களுக்கு முதல் அமைச்சரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். விபத்து ஏற்பட்டதால் பயணம் தடைப்பட்ட பயணிகளை காவலர் வண்டிகளில் தென்காசி ரயில்வே நிலையத்திற்கு அனுப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விபத்து பற்றி தகவல் கிடைத்தவுடன், மருத்துவர்களுடன் கூடிய மருத்துவ நிவாரணச் சிறப்பு இரயில் வண்டிகள் விபத்து நடந்த இடத்திற்கு மதுரை, செங்கோட்டை. கொல்லம் ஆகிய இடங்களிலிருந்து விரைந்து அனுப்பி வைக்கப்பட்டன. உற்றுழிச் சிறப்பு இரயில் வண்டிகள் (பிரேக்டவுன் ஸ்பெஷல்ஸ்) மதுரையிலிருந்தும், செங்கோட்டையிலிருந்தும் அனுப்பிவைக்கப்பட்டன. தென் பிராந்திய இரயில்வேயின் மூத்த அதிகாரிகள் சென்னையிலுள்ள தலைமை இடத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு விமானத்தில் விரைந்தனர். மதுரை இரயில்வே கோட்டக் கண்காணிப்பாளரும், மதுரை கோட்டத்திலுள்ள கோட்ட அதிகாரிகளும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். விபத்தில் காயமடைந்த உள்ளூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 10 பேர் ஒவ்வொருவருக்கும் இரயில்வே அதிகாரிகள் கருணைக் கொடையாக ரூ. 200 வழங்கினர்.

1972 ஆகஸ்ட் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

கீழே பெயர் குறிப்பிட்டுள்ளவர்கள் கடையநல்லூர் திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் :—

கடையநல்லூர் மருத்துவமனை

1. திரு. ஆசீர்வாதம், பண்டகக் கிடங்குக் காப்பாளர், இரயில்வே, கொல்லம்.

2. திரு. சண்முகம், எரியூட்டுபவர் (ஃபயர்மென்), இரயில்வே. மதுரை.

3. திரு. முத்தையா, பயணி.

திருநெல்வேலி மருத்துவமனை

1. திரு. பி. பெருமாள், 109-ம் எண் இரயில் வண்டியின் வலவர்.

2. திரு. சிவசங்கரன், அடையாள விளக்கு காட்டுபவர், இரயில்வே, திருநெல்வேலி.

3. திரு. ஸ்டீபென்சன், 138-ஆம் எண் இரயில் வண்டியின் வலவர்.

4. திரு. காசிம், இ.எல்.ஆர். காங்கியாள், இரயில்வே.

விபத்துக்குள்ளான இரண்டு இரயில் வண்டிகளிலும் பயணம் செய்தவர்களை அவரவர் போய்ச் சேரவேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பங்களூர் இரயில்வே உதவி ஆணையாளர் இந்த இரயில் விபத்து குறித்து செங்கோட்டையில் 18—8—1972 பகல் 11 மணி முதல் விசாரணை நடத்துகிறார்.

The order of business was changed with the consent of the House and the presentation of the First Supplementary Statement of Expenditure for 1972–73 was taken up.

4. 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை வெளியிடுதல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: 1972-73-ஆம் ஆண்டிற்கான முதல் துணை அறிக்கையினை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் வெளியிடுவார்கள்.